உ

திருச்சிற்றம்பலம்.

சம்மேளனப் புலவர்

திரு. வி. 'சிதம்பர' ராமலிங்கம்பிள்ளை

பொறுமைகொண்டு

மறைந்துநின்று வெளியிட்ட

திருவள்ளுவர் குருபூசை நாள் உண்மைவிளக்க

ஆராய்ச்சிக்கு

இடியேறு.

இ. மு. சுப்பிரமணியபிள்ளை

திருவாவடுதுறை, தருமபுர ஆதின

சோதிட வித்வான்

எழுதியது.

"அறனுக்கம் வேண்டாதா னென்பான் பிறனுக்கம்

பேணு தழுக்கறுப் பான்." (குறள்)

மீரானியா பிரஸ், திருநெல்வேலி.

1931.

உ

திருச்சிற்றம்பலம்.

திருவள்ளுவ நாயனார் குருபூசை நாள்

உண்மைவிளக்க ஆராய்ச்சிக்கு

இடியேறு.

திருநெல்வேலியில் வைதிக சைவசம்மேளனம் என ஒரு பெருங் கழகம் இருப்பதாகவும் அதன் அமைச்சர் தாமெனவும் கூறிக்கொள்ளும் திரு. தி. க. உலகநாதபிள்ளை என்பவர் 2-3-31 லும், அதற்கு மறுப்பாக திரு. சி. திரவியம்பிள்ளை 6—4—31 லும், அதன் ஆராய்ச்சியாக ஷை உலகநாதபிள்ளை 25—5—31 லும், சிவநேசனில் வெளியிட்ட திருவள்ளுவ நாயனார் குருபூசைபற்றிய கட்டுரைகளைப் பார்வையிட்டோம். திரு. சி. திரவியம்பிள்ளையினுடைய உண்மை விளக்கத்திற்கு ஆராய்ச்சியொன்று வேண்டுவதின்று. திரு. உலகநாதபிள்ளை அவ்வாராய்ச்சியில் ஏதேதோ வாயில் வந்தவாறு எழுதியிருக்கிறார். அவைகளை உண்மையென்று சாதாரண மக்கள் மயங்காமைப் பொருட்டே இவ் இடியேறு வெளிவருகிறது. இஃது உலகநாதபிள்ளையின் பொய்யுரைகளை இடித்தொழித்துத் திரவியம்பிள்ளையின் உண்மை விளக்கத்திற்கு இட்டதொரு வைரக்குப்பாயம் ஆகும்.

திரு. உலகநாதபிள்ளையை நாம் நேரில் அறிவோம். அவர் போதிய தமிழறிவாவது சமய நூலறிவாவது அமையப்பெறாதவர் என்பதையும் அவர் இந்தப் போலி ஆராய்ச்சியுரையைத் தாமே எழுதும் ஆற்றலில்லாதவர் என்பதையும் நாம் அறிவோம்.

ஆனால், வைதிக சைவ சம்மேளனம் என்பது திருநெல்வேலி இந்துக் காலேஜ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் திரு. வி. சிதம்பர ராமலிங்கம் பிள்ளையால் சில ஆண்டுகளுக்கு முன் பெயரளவில் தோற்றுவிக்கப்பட்டது. அப்பெயரை அவர் தமது இரண்டொரு மாணவரோடு கூடி கற்றல் கேட்டலுடைய பெரியார்களைக் குறை

கூறுவதற்காகவே பெரும்பாலும் பயன் படுத்தி வருகின்றனர். முன் 1920 ல் திருநெல்வேலிக்கு எழுந்தருளி வந்து அரிய பலபெருஞ் சொற்களியற்றி யருளிய திருப்பாதிரிப்புலியூர் உயர் திரு. ஞானியார் சுவாமிகளை இகழ்ந்து 13—4—20 ல் 'மெய்கண்ட சந்தானத்தான்' எனக் கையெழுத்திட்டு மறைந்து நின்று அவர் ஓர் துண்டுத்தாள் வெளியிட்டார். இப்போதும் அவர் தி. க. உலகநாதபிள்ளை பெயருள் மறைந்து நின்று பல வெற்றுரைகள் வெளியிடுகின்றனர். மற்றும் அவர் இராசவல்லிபுரம் 'நடேச சபையார்' என்ற பெயரைக்கொண்டு எம்மையும் உயர் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை M. A., M. L., அவர்களையும், அவர்கள் போன்ற பெரியார்களையும் பல துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் தூற்றி வருகின்றனர்.

நமது சைவப் பஞ்சாங்கத்தில் திருவள்ளுவர் குருபூசை நாளை வைகாசித்திங்களில் வரும் அனுட நாளென முதன்முதற் குறித்தது சென்ற விபவ ஆண்டிலே. இப்போது நான்கு ஆண்டுகளாகின்றன. இந்த வைதிக சைவ சம்மேளனம் அவ் விபவ ஆண்டில் இருந்ததோ? அன்றி அப்போது தூங்கி இப்போதுதான் விழித்ததோ? இத்தனை [விபவ, சுக்கில, பிரமோதூத] ஆண்டுகளின்பின் இப்போதுதானு சம்மேளனம் கண்திறந்து நமது பஞ்சாங்கத்தைக் கண்ணுற்றது?

திரு. உலகநாதபிள்ளை பெயரால் வந்த திரு. வி. சிதம்பரராமலிங்கம்பிள்ளை, திருவாவடுதுறை, தருமபுர ஆதீனங்களின் வித்துவானென்று நம்மை நாமே கூறி வெளியிடுகின்றோமென்றும், சந்திரசேகரப் பாவலர் எனப் புனைபெயரோடு சில ஆராய்ச்சிக்கட்டுரைகளை வெளிபடுகின்றோமென்றும் குறைகூறி நம்மை விணே பழிக்கின்றார். இது இவரது அறியாமையையும் பொறாமையையுமே புலப்படுத்துகின்றது. அதனை ஒரு சிறிது விளக்குவாம்.

நமது சைவப் பஞ்சாங்கத்தைத் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரிடம் நாம் ஒப்புவித்த இரக்தாட்சி வருடம் சித்திரைமீ 25உ (7—5—1924) யன்று எமது ஆருயிர் நண்பரும் பத்தமடைச் சைவசித்தாந்த சபைத் தலைவருமாகிய திரு. பி. அருணாசலப்பிள்ளையவர்களோடு திருவிடைமருதூர் சென்று

ஞானசிரியர் பெருமானாக எழுந்தருளியிராநின்ற மகாசன்னிதானம் உயர்திரு வைத்தியலிங்க தேசிக பரமாசாரிய சுவாமிகளது திருவடிகளைத் தொழுது பணிந்தோம். அப்போது தேசிக சுவாமிகள் மிகமகிழ்ந்து நமது சைவப் பஞ்சாங்கம் தோன்றிய ஆண்டு தொடங்கி அதனைத்தாம் ஆதரித்துவருவதையும் அதன் இன்றியமையாமையையும் புகன்று "திருவாவடுதுறையாதீன வித்துவான்" என்ற பட்டம் எமக்குத் தந்தருளினார்கள். அன்று தொடங்கி இன்றுவரை நாம் நமது பஞ்சாங்கத்தில் அதனைக் குறித்துவருவதுடன் ஆண்டுதோறும் திருவாவடுதுறை சென்று தேசிக சுவாமிகளைப் பணிந்து வருவதுண்டு. அவ்வப்போது பஞ்சாங்கத்தை மதித்து ஆண்டுதோறும் வெகுமதி யளித்துவருகிறார்கள். சென்ற விபவஸு ஆவணிமீ 19உ (3—9—1928) மாயூரம் திருக்குடமுழுக்குக்குச் சென்றிருந்தகாலை நாம் தருமபுரம் சென்று ஞானசிரியராக எழுந்தருளியிராநின்ற மகாசன்னிதானம் உயர்திரு சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகளைப் பணிந்து வணங்கிநிற்க, தேசிக சுவாமிகள் நமது பஞ்சாங்கத்தை மதித்து மிக மகிழ்ந்து எமக்கு 'தருமபுர ஆதீன சோதிட வித்வான்' என்ற பட்டஞ்சூட்டி வெகுமதி யளித்தருளினார்கள். அன்றுதொட்டு இன்றுவரை சமயம் நேர்ந்தபோதெல்லாம் சென்று இருதேசிக சுவாமிகளையும் பணிந்து அருள்பெற்று வருகின்றோம்.

புலவர்கள் புனைபெயருடன் கட்டுரைகள் வெளியிடுவது மரபு என்ற உண்மையை மேல்நாட்டினரும் கீழ்நாட்டினரும் நன்குணர்வர். நாம் அப்படிக்கூடப் புனைபெயருடன் ஓர் கட்டுரையும் வெளியிட்டிருப்பதில்லை. வைதிக சைவ சம்மேளனத்தார் நம்மிடைக் கொண்டுள்ள பகைமைக்கு ஏதுக்கள் சிலவுண்டு. அவற்றை இங்கே காட்டிப் பின்னர் திருவள்ளுவர் குருபூசை பற்றிச்செல்வோம்.

எமது சைவப் பஞ்சாங்கத்தைக் கழகத்தாரிடம் நாம் பதிக்கத் தந்த ஆண்டிற்கடுத்த மறு ஆண்டில் சம்மேளன இராமலிங்கம் பிள்ளை தமது பெயரை எமது பெயரோடு பஞ்சாங்கத்தில் இணைக்க வேண்டுமெனக் கழகத்தாரிடம் வேண்டிக்கொண்டனர். கழகத்தார் அவ்விஷயத்தைப்பற்றி எம்மிடம் கேட்டனர். அவர் பஞ்சாங்கக் கணிதமுறை தெரியாதவராதலால் அவர் பெயரை எமது பெயரோடு இணைக்க யாம் இணங்கவில்லை. அது முதல் கழகத்தினிட

மும், நம்மிடமும் அவர் பகைமை பாராட்டத் தொடங்கினர். திரு. கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் ஆங்கிலக் கல்வியில் எங்ஙனம் மேன்மை பெற்று விளங்குகின்றார்களோ அதுபோல் நம்சேந் தமிழ்மொழியினும் உயரிய திறமையுடன் விளங்குதல் கண்டு பொறாமை கொண்டும், ஷை கழகத்தில் ஒரு டைரெக்டராயிருப் பது பற்றியும் அவர்களிடமும் பகைமை பாராட்டத் தலைப்பட்ட னர். மேலும் எமக்கு அவர் தரவேண்டிய பணத்தை [ரூபாய் பதி னெட்டை] அவரிடம் நெருக்கிக் கேட்டு வருகின்றோம். அவர் எம்மை ஏமாற்ற வழிபார்க்கிறார். இவ்வளவேயன்றி நாம் அவருக்கு மனமாரச்செய்த தீங்கொன்றுமின்று. சிவாகம சம்பந்தமுடைய சைவராகச் சொல்லிக் கொள்ளும் இவர் சிவாகமத்திற் கூறப்படும் சௌரமானக் கொள்கைக்கு மாறுபட்டு விபவஹூ புரட்டாசிமீ நவராத்திரியை சாந்திரமான விதிப்படி நடத்த வேண்டுமென்று முயன்றதற்குக் காரணமும் எம்மீது கொண்ட பொறாமையும் பகை மையுமே யாகும்.

எம்மிடம் பகைமையும் பொறாமையும் கொண்ட சம்மேளனத் தார் சென்ற பிரமோதூத ஆண்டில் பத்தமடை திரு, P.P. முத்து சாமிப்பிள்ளை (இவர் எம்மோடு முதன் முதல் பஞ்சாங்கம் கணித்த வர்) யைக் கொண்டு பஞ்சாங்கம் கணிப்பித்து சித்தாந்த சைவப்பஞ் சாங்கம் என ஒன்று வெளிப்படுத்தினர். ஆனல் அந்தப் பஞ்சாங் கத்தின் கதியும் சமய ஞானத்தின் கதிபோலாயிற்று. அது ஓராண் டிலேயே இறைவன்திருவடி சேர்ந்துவிட்டது.

'அழுக்கற்று அகன்றாருமில்லை அஃதிலார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில்.' (குறள்)

என்ற திருவள்ளுவர் வாக்கு உண்மையாமன்றோ!

அவர் அந்தப் பஞ்சாங்கத்தைத் தம் சம்மேளனப் பெயரால் வெளியிடாமல் இராசவல்லிபுரம் நடேச சபையார் பெயரால் வெளி யிடச் செய்தமைக்குக் காரணம் சைவப்பஞ்சாங்கத்தின்மீது கொண் டுள்ள பொறாமை பொள்ளென வெளிப்பட்டுப்போம் என்பது பற் றிப்போலும்.

நடேச சபையை யாம் நேரில் அறிவோம். சில ஆண்டுகளின் முன் ஓராண்டு அங்குச் சென்று பெருஞ்சொல்லியற்றி வந்தோம்.

அச்சபை அப்போதே இறக்கும்பருவத்திலிருந்தது. அதற்குப் பின் அது சிறிது காலத்தில் முற்றிலும் இறந்துவிட்டது. அச்சபையின் காரியதரிசியென்று சொல்லிக்கொள்கிற திரு. முத்தையபிள்ளையென்பவர் இந்து கலாசாலையில் படித்த காலை திரு. இராமலிங்கம் பிள்ளையின் மாணவராயினர். அதுபற்றி அவர், தமது இறந்த சபையின் பெயரால் தமது பள்ளியாசிரியருடைய விருப்பப்படி அப்பஞ்சாங்கம்வெளியிட இசைந்தனர் போலும்.

இனி, திருவள்ளுவர் குருபூசை நாள் பற்றி ஆராய்ந்து இதுவென நிலைநாட்டுவோம்.

நாம் முதன் முதல் குருபூசை நாளை மாற்றிய காலத்து அதற்குரிய காரணங்களைக் குறியாமைக்குக்காரணம் யாதெனிற்கூறுதும். எமக்கு முன்னரே ஆனந்த போதினிப் பஞ்சாங்கம் முதலிய பஞ்சாங்கங்களில் வைகாசி அனுடமென்பது குறிக்கப்பட்டுப் பழக்கத்தில் வந்துவிட்டது. நிகழும் ஆண்டிலும் ஆனந்தபோதினிப் பஞ்சாங்கம், அமிர்த குணபோதினிப் பஞ்சாங்கம், ஆர்க்காடு சர்வமுகூர்த்தப்பஞ்சாங்கம், சென்னை திரு. துரைசாமிஅய்யங்கார் பஞ்சாங்கம் யாழ்ப்பாணம் திரு. சுப்பிரமணிய சாஸ்திரியார் பஞ்சாங்கம் முதலிய பஞ்சாங்கங்களிலும் வைகாசி அனுடத்திலேயே திருவள்ளுவர் குருபூசை குறிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன் மாசியில் குறித்து வந்த திருநெல்வேலி திரு. இராமலிங்க ஜோசியருடைய மகனூர் திரு. வெங்கிடகுருநாத சாஸ்திரியாரும் இவ்வாண்டில் வைகாசி அனுடமென்றே குறித்துள்ளார். தெரியாத இரண்டொரு பஞ்சாங்கத்தார்மட்டும் மாசியிற் குறித்திருக்கின்றனர். இவற்றையெல்லாம் உணராத சம்மேளனத்தார் எம்மை மட்டும் திருவள்ளுவர் குருபூசை தினத்தை மாற்றியதாகத் தூற்றித் துண்டுப்பிரசுரம் வெளியிடக்காரணமென்ன? இதற்குக் காரணம் எம்மீது கொண்ட பகைமையும் பொறாமையுமன்றி வேறென்னை?

சம்மேளனத்தார் தமது ஆராய்ச்சித்தாள் பக்கம் 1-ல் "இப்போது மூன்று ஆண்டுகளாக முன்வழக்கத்திற்கு மாறாக" என்றும், பக்கம் பதின்மூன்றில் "முன்வழக்கத்திற்கு மாறாகச்சென்ற நான்கு ஆண்டுகளாக" என்றும் குறித்திருக்கிறார். அவருக்குச் சிறுபிள்ளைகள் அறிந்த கூட்டல்கூடத் தெரியாதுபோயிற்றுப்போலும்! அவர்

ஆராய்ச்சி தொடங்கியது 2—3—31-ல், "மூன்று ஆண்டுகளாக" இருந்தது. 25—5—31-ல் "சென்ற நான்கு ஆண்டுகள்" ஆவது எப்படி? இத்தகையாரிடைக் கணக்குப்படிக்க மாணவரைத் தெரிந்தனுப்புவது இன்றியமையாததே. அவர் அறிவு சாலப் பெரிதே!

திரு. S. சந்தனம்பிள்ளையவர்கள் எமக்குத் திருப்பாதிரிப்புலியூருக்குக் கடிதம் அனுப்பியதாக எழுதியிருப்பது புதுமையே. அது எந்த ஆகாயத்தபால் மார்க்கம் அனுப்பப்பட்டதோ தெரியவில்லை. அக்கடிதம் எமக்கு கிடைக்கவில்லை.

இனி, திருவள்ளுவர் குருபூசை உண்மை விளக்கத்தில், திருவள்ளுவர் பிறந்தநாள் மாசி உத்தரமென்றும் திருவடியடைந்த நாள் வைகாசி அனுடமென்றும் குறித்த பழையபாட்டொன்று குறிக்கப் பெற்றிருக்கிறது. அது வருமாறு:—

"கும்பமதி யுத்தரத்தில் கோள்களுயர் சீர்பெறவே
இம்பருல கெய்து திருவள்ளுவனார்—செம்பவள
மேனியரன் சீரடியில் மேவுதிரு நாளனுடந்
தானிடப நன்மதியே தான்."

இப்பாட்டில் "அனுடந்தான் இடப நன்மதியேதான்" என்று நாளை முன்னும் மாதத்தைப் பின்னும் குறித்திருக்கிறது: இது சைவ சித்தாந்த சம்பிரதாயமன்றெனச் சம்மேளனத்தார் கூறுகின்றார். இவர் கண்ட செய்யுளிலக்கணம் யாண்டுளதோ? அறியேம். செய்யுளில் சொற்கள் முன்பின்னாக மாறிவரும். அன்வய இலக்கணங்கூட இவர் அறியார் கொல்லோ! செய்யுளிலக்கணத்தைக்கூட அறிய விடாமற்செய்த அழுக்காற்றின் பெருமையே பெருமை. மேலும், மாதத்தினும் நாளே தலைசிறந்தது. அந்நாள் விழாவைப் பணமிருப்பின் மாதந்தோறும் செய்யலாம். சதுர்த்தியும் சஷ்டியும் மாதந்தோறும், அதிலும் பக்கந்தோறும் கொண்டாடப் பெறுவன. மாதவச் சிவஞான சுவாமிகளுடைய மாணவர்களில் ஒருவராகிய தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் தமது ஆசிரியர்மீது பாடிய புகழ்மாலையில் "ஆயிலிய நாளாரை ஆவடுதுறையாரை" என முனிவர் பெருமான் திருவடியடைந்த நாட் பெயராலேயே அவரைக் குறிக்கின்றனர். திருஞானசம்பந்தப் பெருமானுடைய திருஅவதா

ரத்தைக் கூறவந்த இடத்திலே சேக்கிழார் சுவாமிகள் திருத்தொண்டர் புராணத்திலுள்ள

"அருக்கன் முதற்கோளனைத்து மழகிய வுச்சங்களிலே
பெருக்க வலியுடனிற்கப் பேணியநல்லோரை யெழத்
திருக்கிளரு மாதிரைநாள்."

என்ற திருப்பாட்டில் நல் ஓரை (நல்ல நாழிகை) யை முன்னரும் ஆதிரைநாளைப் பின்னரும் கூறினமையால் இத்திருப்பாட்டையும் சைவசித்தாந்த மரபுக்கு மாறுபட்டதென்று சைவ சம்மேளனப் புலவர் கூறமுற்படுவர் போலும்? அந்தோ! அழுக்காற்றின் வலிதான் என்னே! என்னே!! இனி, அவர்கூறும் பழம்பாட்டை ஆராய்வாம்.

திருவள்ளுவர் குருபூசை நாள் மாசி உத்தரம் என்பதற்கு அவர் காட்டும் ஆதாரங்கள் இரண்டே. அவை (க) உயர்திரு ஆறுமுக நாவலர் அவர்கள் சைவ வினாவிடையில் எழுதிய குறிப்பு (2) பழம் பாடல். உயர்திரு. நாவலர் அவர்கள் திருவள்ளுவருடைய திருக்குறளை வெளிப்படுத்திய வள்ளலாவர். வள்ளுவர் குருபூசை நாளை அவர்கள் திருக்குறளிலே குறித்திருக்க வேண்டியதே பொருத்தமுடையது. அதில் அவர்கள் அதுபற்றி ஓரெழுத்தேனுங் குறித்திலர். சம்மேளனத்தார் கூறும் பழம் பாட்டும் அதிலில்லை. புலவர் பெருமானாக இருந்த திருத்தணிகை சரவணப்பெருமாளய்யர் அவர்களுடைய பதிப்பிலும், அப்பதிப்பிற்கிணங்கிப் பின் கி. பி. 1885 ல் வெளிவந்த திருமயிலை வைத்திலிங்க தேசிகரவர்கள் பதிப்பிலும் இப்பழம் பாட்டு இடம்பெறவில்லை. பின் இது எங்கேயிருக்கிறதென்றால்சம்மேளனத்தார் தமக்கு ஆதாரமாகக்கூறும் சென்னை B. இரத்தின நாய்கர் அண்டுசன்ஸ் கம்பனியார் வெளியிட்டிருக்குந் திருக்குறட் பரிமேழகருரைப் புத்தகத்தில் திருவள்ளுவநாயனார் திவ்விய சரித்திரம் என்ற பகுதியின் ஈற்றில் உள்ளது. அப்புத்தகம் கி. பி. 1927 ல் தான் பதிப்பிக்கப் பெற்றதாகலின் அப்பாட்டின் காலமும் சமீபமே என்பது தெற்றெனப் புலனாகிறது. இனி அப்பதிப்பிற் குறித்துள்ள பாட்டு வருமாறு:—

மாசி யுத்திரத்தினத்தில் வள்ளுவனார் மாநிலம் விட்
டாசில் பல முத்தியடைந்தாரால்—காசினியில்
கொல்லா விரதங் குறிக்கொண்டாரெல்லாரும்
நல்லார்வஞ்செய்யினந்த நாள்."

இதனை அழகு படுத்த எண்ணிய சம்மேளத்தார் 'உத்திரத்தை உத்தரமாகவும்' பல முத்தியைப் பரமுத்தி யெனவும், படர்க்கையை முன்னிலையாகவும் மாற்றிப் பல படத்திருத்திப் பின் வருமாறு கூறுகிறார்.

"மாசி யுத்தரத்தினத்தில் வள்ளுவனார் மாநிலம் விட்
டாசில் பரமுத்தி யடைந்தனராற்—காசினியிற்
கொல்லா விரதங் கைக்கொண்டீர்களெல்லீரு
நல்லார்வஞ் செய்ம்மினந்த நாள்."

இவ்வொரு பாடலிலேயே இவ்வளவு மாறுபாடுகள் செய்யத் துணிந்த சம்மேளனத்தார் தருமருரையிற் கண்ட பாட பேதப்படி 'அறிதொழிலே' னுந் திருத்தங்கொண்ட திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களைப் பழித்தல் எத்துணை அடாத செய்கையாம்?

காலஞ்சென்ற சமய ஞான முற்றுக் குறைமலர் க. இதழ் 5. பக்கம் 154 ல் நீதிமொழிகள் என்று தலைப்பிட்டு நான்காவதாகக்குறித்துள்ளதை அவர் படித்துப்பார்ப்பாராக. அதில் "ஓசை மங்கியதரா, வெண்கலமாகிய இலைகள் தாம் பேசுமே யல்லாது, மாற்றுயர்ந்த தங்கம் கனீரென்று பேசுமோ" என்ற நீதிமொழிக்கு இவரே இலக்கியமாவர் போலும். அந்நீதி மொழியில் முதலாவதாகக் குறிக்கப் பெற்றுள்ளது "கல்வி யறிவில்லாத அற்பர்கள் தம்மைப் பிறர் மதிக்க வேண்டுமென்று கருதி மற்றவர்களுடைய குற்றங்களை மட்டும் சிறிதும் அச்சமின்றித் தூற்றுவார்கள்" என்பது. இதற்குத் தகுந்த எடுத்துக் காட்டாக உள்ளது சிவநேசனில் வெளிவரும் தமிழ் இலக்கிய வரலாற்றாராய்ச்சி. இலக்கிய வரலாறு என்பது திரு. கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் எழுதிய நூல். ஆராய்ச்சி என்பது நடுவு நிலைமையினின்று மாறாது குறைவையும் நிறைவையும் ஒருங்கே எடுத்தியம்புவதாக இருத்தலே. அதனை விடுத்து ஒரு நூலிலே தமக்குக் குறையென்று தோன்றுபவைகளையே எடுத்தியம்ப வேண்டுமென்று துணிந்து ஒருவர் ஆராய்ச்சி எழுதுவரேல் அது எவ்வாறு ஆராய்ச்சியாம்? இதனுண்மை அறிஞர் அறிவர்.

உயர்திரு. ஆறுமுகநாவலர் அவர்கள் சென்னையிலிருந்த சமயம் திருமயிலாப்பூரிலுள்ள திருவள்ளுவரது கோவிலுக்குச் சென்றிருக்க

லாம். அச்சமயம் மாசியுத்தர விழா அங்கே நடைபெற்றிருக்கலாம், அதனையே அவர்கள் குருபூசை நாளென்று எண்ணித் தமது சைவ வினாவிடையில் குறித்திருத்தல் கூடும் அல்லது மயிலாப்பூர் சென்று திரும்பிய ஓர் அறிஞரிடை உசாவ அவர் தவறுதலாக மாசி உத்தர விழாவைக் குருபூசை விழாவென்று அவர்களிடம் கூறியிருத்தலுங் கூடும். இவ்வாறு ஒரு குருபூசை விழாவைத் தவறுதலாகக் குறித்து விட்டபடியால் உயர்திரு. நாவலர் அவர்களுடைய பெருமை குறைந் தாபோகும்? யானைக்கும் அடி சருக்குவது இயல்பே. இதனையறி யாது யானையும் அடிசருக்குமா? என எண்ணுவது அறியாமையே. மெய்ப்பொருள் இதுவென ஆராய்ந்து காண்பதே அறிவு. திருவள் ளுவருக்குத் தனிக்கோயில் திருமயிலாப்பூர் ஒன்றிலேயுள்ளது. அத் திருக்கோயில் திருவள்ளுவர் மாணவராகிய எலேல சிங்கரால் நிறு வப்பட்டதென்ப. திருக்கோயிலில் பண்டுதொட்டுத் திருவள்ளு வருடைய திருஉருவம் மாணவருக்கு நன்னெறி புகட்டியருளும் ஆசிரியக்கோலத்தோடு அமைந்து திகழ்கிறது. அதில் அவருடைய இடது கையில் திருக்குறள் ஏட்டுருவும் அமைத்து அவ் ஏட்டின் கண் "திருக்குறள்" எனப் பெயர் பொறிக்கப் பெற்றிருக்கிறது. சென்னையிலேயே பல ஆண்டுகட்கு முன்னர் புலவர் தலைவராய் வீற்றிருந்த உயர்திரு செல்வ கேசவராயமுதலியாரவர்கள் M. A. திருமயிலைக்கோவிலைப்பற்றி எழுதும்போது தமது 'திருவள்ளுவர்' என்ற ஆராய்ச்சி உரை நடைநூல் பக்கம் ஒன்பதில் நாம் முன் குறித்ததையே செம்மையாக எழுதியிருக்கிறார்கள். சம்மேளனப் புலவர் பிரமாணமாகக் கொண்ட இரத்தின நாயக்கர் பதிப்பிலுள்ள திருவள்ளுவர் வரலாறும் திருவள்ளுவ நாயனார் மயிலாப்பூரிலே வாழ்ந்திருந்து முத்தியடைந்தனரெனவே கூறுகிறது. அறிஞர் அனைவரும் அங்ஙனமே கூறுவர். மேலும் அக்கோவிலிலே தெய் வப்புலவரது திருமனைவியாராகிய வாசுகியம்மையாருடைய திரு வுருவமும் தனியாக இடதுபுறம் அமைந்துள்ளது. இத்தனைக்கும் மேலாக, அக்கோவில் மிகவும் பழமையானதாய்ப் பண்டைக்கால முறைமையில் அமைந்த கட்டிடமாக இருக்கிறது. திருமயிலாப் பூரிலே யாம் சென்று நேரே கண்டு ஆங்குள்ள திருவள்ளுவர் கழக அமைச்சரிடமும் ஏனைய பெரியாரிடமும் வினவி உண்மை தெளிந் தோம். மேலேகண்ட காரணங்களினால் திருமயிலையிலுள்ளகோவில் திருக்குறளாசிரியராகிய திருவள்ளுவநாயனரது திருக்கோவிலே

என்பதற்கு யாதொரு தடையுமில்லை. இத்துணைப் பிரமாணங்களோடு அமைந்துள்ள திருக்கோயிலை சம்மேளனத்தார் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் கோவிலென்று ஒத்துக்கொள்ளாமல் ஞானவெட்டியான் பாடிய திருவள்ளுவர் வேறு ஒருவரிருந்ததாகவும், அவரது கோயில்தான் திருமயிலாப்பூர் திருவள்ளுவர் கோயிலென்றும் பிதற்றுகின்றனர். அதற்குக் காரணம், அக்கோயில் இப்போது வீரசைவர் வசமாயிருப்பதுவே யாம் என்று கூறுகின்றனர். வீரசைவருக்கும் ஞானவெட்டியான் ஆசிரியருக்கும் யாதேனும் சம்பந்தமுண்டா? அங்ஙனம் இல்லாததாகவே அவர் கூற்றுப்பொருந்துமாறு இல்லையென்பதே தேற்றமாம்.

இனி, ஞானவெட்டியான் பதிப்புரையில் ஞானவெட்டியான் பாடியதாகச் சொல்லப்படுகின்ற திருவள்ளுவர் சரித்திரமும், திருக்குறள் செய்தருளிய திருவள்ளுவர் சரித்திரமும் யாதொரு மாறுபாடுமின்றி ஒன்றாகவே காணப்படுதலின் திருவள்ளுவர் இருவர் என்பதற்குக் காரணம் எதும் இருப்பதாகத் தெரியவில்லை. இது, மற்றோரை மயக்கித் தமது கொள்கையை நிலைநாட்டுவதற்குக் கைக்கொண்ட மாயமேயன்றிப் பிறிதன்று.

ஆனால், சம்மேளனத்தாரை அக்கோவில் அவருடையதன்றேயென்று கூறத்தூண்டியது யாதோ எனின் அது வீரசைவர்களுடைய வசத்திலிருப்பதே. சம்மேளனத்தார் வீரசைவர்களிடத்திற்கொண்டுள்ள வெறுப்பே தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாருடைய கோவிலைக்கூட அவருடையதன்றெனக் கூறத்தூண்டிற்றுப்போலும்! வீரசைவர்களுடைய வசத்திலிருக்கிற சிதம்பரத்தருகிலுள்ள கொற்றவன்குடி சைவசமய சந்தானாச்சாரியராகிய உமாபதி சிவாசாரியருடைய திருக்கோவிலையும், அதன் திருமுன்புள்ள அவர்தம் முதன்மாணவர் அருணமச்சிவாயருடைய திருக்கோவிலையுங்கூட சம்மேளனத்தார் அவர்களுடையன அல்லவெனக் கூற இனி முற்படுவர் போலும்! திருமயிலையில் தமது திருமனைவியாராகிய வாசுகியாரோடு கோவில் கொண்டெழுந்தருளியிராநின்ற திருவள்ளுவரை அவர் அல்லர் எனக்கூறுவது முழுப்பூசனிக்காயைப் பிடி. சோற்றுள் மறைப்பது போலாம். அம்மம்ம, பெருங்கொடும் பாவம் புரிந்த நமது சம்மேளனத்தாருக்கு ஐயோ!

இனி ஞானவெட்டியானைப் பற்றி ஆராய்வாம். ஞானவெட்டியான் என்ற நூலை இயற்றியவர் வள்ளுவ மரபினர். அதனாலே அவர் தம் மரபுப்பெயரைத் தம் நூலுக்கமைத்து ஞானமடைந்த வெட்டியான் என்றனர். பாடல் 1099-ல் "ஞானவெட்டியா யுலகில் நானுதித்து" என்றது மது: அவர் தம்மைத் திருவள்ளுவனென வும் வள்ளுவனெனவும் பல இடங்களில் கூறுவது தமது குலப்பெயர் துலங்கவே; தம்மைத் திருக்குறளாசிரியராகக் கருதவன்று. (பாடல் 101, 439, 455, 820) மேலும் தம்மை அவர் ஞானவெட்டியானெனப் பல விடங்களில் கூறுகிறார்.

அவரே திருக்குறள் ஆசிரியராகிய திருவள்ளுவனாரைக்காப்பில் வாழ்த்துகிறார். இவர் தம் இயற்கைப்பெயர்தான் யாதென ஆராய்ந்தால் அவர் தம் பாடல் 1035-ல் "இந்நூல் மவுனந்தன்னில் கெடிவீர சிங்கமெனும் ஞானவெட்டியாலமைத்த" என்று வருகிறது. இதில், வீர சிங்கமெனும் ஞானவெட்டி என்பதால், அவர் இயற்பெயர் வீரசிங்கமென ஊகிக்க இடமுண்டு. இதனால், ஞான வெட்டியான் என்ற ஆசிரியர் தம்மையே திருக்குறள் எழுதிய திருவள்ளுவரெனக் கூறினார் என்று நமது சம்மேளனத்தார் கூறுவது பெரும் பிழையாதல் தெளிவாம். ஆனால் சம்மேளனத்தார் ஞானவெட்டியான் 1415-ல் (இவ்வெண் திருவேங்கிட முதலியார் பதிப்புப்படி, வளவனூர் முத்துசாமி முதலியாரது காளயுத்தி வருடப் பதிப்புப்படி 1380) 'முடித்து வைத்தேன் குறளதுவாய் உலகோர்க் காண்டே" என்று வருவதைக்கூறி அதனால் ஞானவெட்டியான் தம்மைத் திருவள்ளுவ நாயனாரெனக் கூறினாரென மயங்கி மயக்குகிறார்.

உண்மையில் ஞானவெட்டியான் பாடிய ஆசிரியர் திருவள்ளுவரன்று. ஞானவெட்டியான் பாடலால் வீரசிங்கம் என்பவரால் பாடப்பெற்றதென்றே புலனாகின்றது. இனி ஞான வெட்டியான் அச்சிட்டவர் அதனை ஆக்கியோன் திருக்குறள் எழுதிய திருவள்ளுவரென மயங்கி அவர் சரித்திரத்தையே எழுதியிருக்கிறார். இவ்வாற்றால் திருமயிலாப்பூரிலுள்ள திருவள்ளுவர் கோயில் ஞானவெட்டியான் பாடிய வேறு ஒரு திருவள்ளுவர் கோயிலென்று சம்மேளனத்தார் கூறினமை மயக்க உரையேயாகும். பால் கொக்குப்போல வெள்ளையானதென உரைக்கக்கேட்டுக் கொக்குருவைத் தன் மனைவி

கையில் தொட்டுக்கண்ட குருடன் இது பிள்ளை வாய்ப்புகுந்தால் கொல்லுமே என அழுதனனும். அதுபோல ஞானவெட்டியானில் ஒரு பாடலின் ஒரு பகுதியை மட்டுங் கண்ட சம்மேளனத்தார் இங்ஙனம் மயங்கினர் போலும்! அந்தோ! அன்றி; அவர் அப் பாடல் முழுமையும் படித்தறிந்து தான் வேண்டுமென்று பிறரை ஏமாற்ற பாடல் முழுமையுங் கூறாது பகுதிமட்டும் குறித்தனரோ? அப்பாடல் வருமாறு:-

"இந்நூலில் சொன்ன முறை யடங்காமற்றான்
என்னூறு வயித்தியந்தா னியம்ப லானேன்
அந்நூலு மிந்நூலு மார்க்குக் கிட்டும்
அனுபோகி கற்ப முண்போ ரவர்க்குக் கிட்டும்
பின்னமொரு நாளுமில்லை பிழைதா னில்லை
பெருநூல்காண் ஆயிரத்து ஐந்நா ரிந்நூல்
முன்னமே யான்பாடி விட்டே னாயிரத்து முந்நூறு
முடித்து வைத்தேன் குறளதுவாய் உலகோர்க்காண்டே."

"வயித்தியம் எண்ணூறு" என்றும், ஞானவெட்டியான் என்றும், வைத்திய நூல்கள் செய்தமை கூறுகிற வீரசிங்கர்" முன்னமே யான் பாடிவிட்டேன் ஆயிரத்து முந்நூறு அதனை உலகோர்க்குக் குறளதுவாய் முடித்து வைத்தேன் என்று கூறுகின்றார். திரு திருவள்ளுவ நாயனார் திருவாய்மலர்ந்தருளிய திருக்குறள் ஆயிரத்து முந்நூற்று முப்பது என்பது உலகறிந்ததே. இங்கே வீரசிங்கர் முடித்து வைத்தது ஆயிரத்து முந்நூறு தான். அதலின் இது வேறொரு வைத்திய நூலாகத்தானிருக்க வேண்டும். அக் குறள் நூல் தான் யாதோவெனில் நீதி நூலன்று, வீரசிங்கர் திறம் படக் கூறும் வயித்திய நூலாகவே ஆதல் வேண்டும். இதனால் வீரசிங்காகிய ஞானவெட்டியான் தமது வரலாற்றை வெளிப்படையாகக் கூறியிருக்கின்றாரென்பதும், அவரைத் திருக்குறளாசிரியரோ எனச் சிலர் மயங்குவது மயங்குகின்றவர் தவறே என்பதும் நிலை பெறுகின்றன. 1925-ல் ஞானவெட்டியானைப் பதித்த திருமயிலைத் திருவேங்கட முதலியாரும் ஞானவெட்டியானாசிரியர் திருவள்ளுவரே என மயங்கிப் பதித்துள்ளார். 'அப்பதிப்பில் அவர் திருக்குறளாசிரியர் வரலாற்றையே கூறிப் பக்கம் 15-ல் "திருவள்ளுவர் திருவடியடைந்த நாள் வைகாச அனுஷமென்று திருவள்ளுவர் புரா

ணம் கூறும்' எனக் குறித்திருக்கிறார். திருக்குறள் நூலார் குரு பூசையையே அவர் குறித்தாராதலின் அதில் யாதொரு பிழையுமில்லை.

'எருது ஈன்றது' என்பதன் முன் 'என்ன கன்று? பிடித்துக் கட்டு' என்பார் போல யாரோ சிலர் ஞானவெட்டியான் என்ற நூலைத் திருவள்ளுவநாயனார் இயற்றினார் என்று கூறியதை நம்பி சம்மேளனப்புராணிகர் அதன் மேலும் அவர்க்கொரு கதை கட்டத் தொடங்குகிறார்." திருக்குறளாசிரியராகிய திருவள்ளுவநாயனார் முத்திபெற்ற நாளில் ஒரு குழந்தை பிறக்க அதற்குத் திருவள்ளுவரென்று பெயரமைந்து அப்பிள்ளையே ஞானவெட்டியா னியற்றி வைகாசி அனுடத்தில் முத்தி பெற்றதெனப் புராணம் கட்டத் தொடங்குகிறார். திருமயிலாப்பூரிலுள்ள கோவில் உலகமெல்லாம் புகழும் திருவள்ளுவநாயனாரது. இல்லையானால் அது வேறு எங்கே இருக்கிறது? உலகப்பெரியாராகிய திருவள்ளுவருக்குக் கோவில் எற்படுத்தாமல் நேற்றுப்பிறந்து அவர் பெயரிடப்பெற்றவராகச் சம்மேளனத்தார் கூறும் ஒரு வெட்டியானுக்காக திருமயிலாப்பூரில் உலகினர் ஒரு கோவில் கண்டு பக்கத்தில் வாசுகியம்மையாரையும் எழுந்தருளிவித்து நித்தல் விழா வணிநிகழச்செய்துள்ள திருமயிலாப்பூர் கோவிலை வேண்டுமானால் சம்மேளனத்தார் தள்ளிவிடட்டும். திருவொற்றியூரிலுள்ள திருவள்ளுவருடைய கோவிலில் வைகாசி அனுடத்திலேயே குருபூசை விழா நடைபெறுகிறதே. இது எந்த வெட்டியான் திருவள்ளுவரோ தெரியவில்லை. அதற்கு என்ன மறுமொழி சொல்லுகிறார் சம்மேளனப்புலவர்? இதுபற்றி உண்மை விளக்கத்தில் திரு. சி. திரவியம்பிள்ளை குறித்திருந்தார். இதனை சம்மேளனப் புலவர் கண் கண்டிலது போலும்! கண்டிருந்தால் இதனையும் வேறொரு திருவள்ளுவர் கோவிலெனக் கூறப் புதுக்கதை யொன்று கட்ட முன் வந்திருப்பார். நல்ல வேளையாகவே அக் குறிப்பு அவர் கண்ணில் விழுந்திலது. எத்தகைய கொடிய பாவச் செயலை அவர் செய்ய முன் வந்தார்! இதை நினைக்கும்போதே அறிஞர் நெஞ்சம் துணுக்குறுவர்! கோவில்களை யெல்லாம் சமாதிகளென்று கூட அவர் சொல்ல முன் வருவார் போலும்! ஐயகோ!

சில இடங்களில் திருவள்ளுவ நாயனார் குருபூசை உயர்திரு. ஆறுமுக நாவலர் அவர்களுடைய குறிப்பை நம்பி மாசியுத்தரத்தில்

நடை பெற்றிருக்கலாம். சம்மேளனத்தார் குறிப்பிடும் மாவடி திரு. ச. சிவகுருநாதபிள்ளையவர்களை யாமும் அறிவோம். பல ஆண்டுகளாக மாசி உத்தரத்தில் நடத்திவந்த அப்பெரியார் சில ஆண்டுகளாக வைகாசி அனுடத்திலேயே நடத்தி வருகிறார்கள். அவர்கள் நிகழும் பிரசோற்பத்தி ஆண்டிலும் சம்மேளனப்புலவர் ஏதேதோ சொல்லித்தடுத்தும் வைகாசி அனுடத்திலே நடத்தினார்களென்பதைக் குருபூசை கழிந்த மறுநாள் அவர்களே எம்மிடம் நேரில் மொழிந்தார்கள். இதற்கு மாறாகிய சம்மேளனத்தார் கூற்றை உலகம் சீர்தூக்கி யறிவதாக.

இனி, திருவள்ளுவர் புராணம்பற்றி ஆராய்வோம். ஒரு நூல் ஒரு பிரதியாக இருந்தாலினும், இது காறும் அச்சேறாமலிருந்தனினும் அதன் பழமையும் பெருமையும் குன்றுமா? தொல்காப்பியம் இளம்பூரணம் பற்றியும் திருக்குறள் மணக்குடவருரைபற்றியும் பிறபண்டைத் தமிழ் நூல்கள் பற்றியும் சம்மேளனத்தார் அறிந்திருப்பாரேல் திருவள்ளுவர் புராணத்தைப்பற்றி இழிவாக எழுத முன் வந்திருக்கமாட்டார். சிவஞானமாபடியம் எத்தனை பிரதிகளிலிருந்து எப்போது வெளி வந்தது? அப்புராணம் வெளி வாராததற்குக் காரணம் தமிழ் மக்களது ஊக்கக் குறைவுதான். திருவள்ளுவர் கோவிலை ஞானவெட்டியான் கோவிலெனக் கூறும் சம்மேளனத்தார் போன்ற பிள்ளைகளாலேயே தமிழன்னை தவிக்கிறாள் என்பது வெள்ளிடை மலை.

சம்மேளனத்தார் பிரமாணமாகக் கொண்ட திருமயிலைத் திருவேங்கடமுதலியார் பதிப்பு "ஞானவெட்டியான் பக்கம் 15-ல் திருவள்ளுவர் திருவடி யடைந்தது வைகாசி அனுஷமென்பது திருவள்ளுவர் புராணங் கூறும்" என்று காணப்பெறும் குறிப்பாலும், அதற்குச் சம்மேளனத்தாரே உடன்படுவதனாலும் திருவள்ளுவர் புராண உண்மையும், அதிலுள்ள அக்குறிப்புண்மையும் வெளிப்படை. அப்புராணத்திற் குறித்த செய்யுளை யாம் சென்னை சென்றிருந்தபோது படித்தோம். ஆனால் அதனை எழுதிக்கொண்டு வரவில்லை. அதனை எழுதியனுப்புமாறு திருமயிலைக்கு எழுதியிருக்கிறோம். வந்தவுடன் தனியே வெளியிடுவோம்.

முடிவுரை.

இதுகாறுங் கூறியவாற்ருல், திருவள்ளுவநாயனர் குருபூசை நாள் உண்மை விளக்க ஆராய்ச்சி எழுதியவர் திரு. உலகநாதபிள்ளை யல்லர் என்பதும், அதனை எழுதியவர் திரு. வி. சிதம்பரராமலிங்கம் பிள்ளையே என்பதும், அவர் பெரியாரைக் குறைகூறுவதற்காகவே வைதிக சைவசம்மேளனத்தைப் பேரளவில் வைத்திருக்கின்றனர் என்பதும், அவரே நடேச சபைக் காரியதரிசிபோலும் வெளிவருபவர் என்பதும், சம்மேளனந் தனதருமகவாகிய சமய ஞானத்தை இழந்தும், பணம் தந்தவர்க்கு அஞ்சியுமே இதுவரை பணப்பெற்று மூன்ருண்டுகள் கழிய வேண்டுமென்று ஒழித்திருந்தது போலும் என்பதும், உயர் திரு. ஆறுமுக நாவலர் அவர்கள் சைவவினுவிடையில் குறித்த மாசி யுத்தரமென்ற குறிப்பு தகுந்த ஆதாரத்தோடு குறித்ததில்லை என்பதும், அதனுல் அவர்களுடைய பெருமைக்கு யாதொரு குறைவும் வாராதென்பதும், ஐம்பதறுபது ஆண்டுகளுக்கு முன்னரே அச்சேறிய நாவலரவர்கள் முதலிய பலபெரியார்களுடைய திருக்குறட் பதிப்புகளில் காணப்பெருது, நான்கு ஆண்டுகளின் முன்னரேவெளிவந்த இரத்தினநாயகரவர்கள் கம்பெனிப்பதிப்பில் மட்டும் காணப்பெறும் "மாசியுத்திர" என்ற வெண்பா புதிதாகவும் பிழை மலிந்ததாகவும் இருக்கிறதனுலும் அதனையே சம்மேளனத்தார் தம் மனம்போலப் பிழைபடத் திருத்தியிருக்கிறதனுலும் அது பிரமாணமாக அறிஞரால் கொள்ளத்தக்கதன்று என்பதும், இவ் இடியேற்ருல் சம்மேளனத்தார் வதுக்கள் இடிந்தொழிந்தன என்பதும், திருமயிலைக் கோவில் திருக்குறளாசிரியராகிய திருவள்ளுவனுருடையதே என்பதும், அக்கோவிலில் வைகாசி அனுடத்தில் குருபூசை நடந்துவருவதை மறுக்க வழி தெரியாது சம்மேளனத்தார் இரண்டு திருவள்ளுவர்கள் இருந்ததாக மக்களை மயங்க வைக்கவே கூறினர் என்பதும், திருமயிலைக் கோவிலினுள்ள திருவள்ளுவருடைய திருவுருவச்சிலையில் கையிலுள்ள எட்டில் திருக்குறள் என்ற் பெயர் பொறிக்கப்பெற்றிருத்தலாலும் வாசுகியம்மையார் கோவிலுடைமையாலும் பழங்கால முறைப்படி அது அமைந்திருத்தலாலும் அக்கோவில் திருக்குறளாசிரியருடையதே என்பது பசுமரத்தாணிபோல் நிலைபெறுகிறதென்பதும், ஞானவெட்டியான் என்ற நூலை இயற்றியவர் வீரசிங்கரென இயற்பெயருடைய வள்ளுவ மரபினர் என்பதும், அதனுல் வேறொரு திருவள்ளுவர் இருக்

தாரென்பது மயக்க உரையே என்பதும், திருமயிலைக் கோவிலை வீரசைவருடைய ஆதிக்கத்திலிருக்கும் காரணம்பற்றி விலக்கினால், கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியருடையகோவிலையும் விலக்க வேண்டி வருவதோடு அது நினைக்கருங் கொடும்பாவச்செயலாகு மென்பதும், திருவள்ளுவர் புராண உண்மையும் அது வைகாசி அனுடத்திலேயே திருவள்ளுவர் குருபூசையை விதித்தலும் சம் மேளனத்தார் பிரமாணமாகக்கொண்டு தமது ஆராய்ச்சியில் காட் டும் திருமயிலைத் திருவேங்கடமுதலியாருடைய குறிப்பால் விளங் குகின்றதென்பதும், உண்மை விளக்கத்தில் கண்ட 'கும்பமதி யுத்தரத்தில்' என்ற செய்யுள்பற்றிச் சம்மேளனத்தார் தடைகள் வலியற்றொழிந்தன என்பதும், அதனால் திருமயிலையிலும், திரு வொற்றியூரிலுமுள்ள கோவில்களிலும் பண்டு தொட்டு திருவள்ளு வனார் குருபூசைநாள் வைகாசி அனுடத்திலேயே நடைபெற்று வருகின்றதென்பதும், பிழை கண்ட விடத்துத் திருத்திக்கொள் வதே அறிஞர் செயல் என்பதும் பிறவும் கூறுமாற்றால் நாம் நமது சைவப்பஞ்சாங்கத்தில் சில காலமாகக் குறித்து வருகிறபடி திருவள் ளுவநாயனாருடைய குருபூசை நாள் வைகாசி அனுடத்தில் உலகி னர் அனைவராலும் கொண்டாடத்தக்கதென்பது வலியுறுத்தப்பெற் றது.

"கும்பமதி யுத்தரத்தில் கோள்க ளுயர் சிர்பெறவே
இம்பருல கெய்து திருவள்ளுவனார்—செம்பவள
மேனியரன் சீரடியில் மேவுதிருநாளனுடந்
தானிடப நன்மதியே தான்."

குறிப்பு:— சிவநேசன் பத்திராதிபர் அவர்கள் இவ்விவாதத் தில் கலந்து 25—5—31 லும், 22—6—31 லும் குறிப்புகள் வெளி யிட்டிருக்கின்றனர். முதற்குறிப்பில் திருவள்ளுவர் இருவரென் பதை ஒப்பியதோடு திருமயிலைக்கோவில் திருக்குறளாசிரியராகிய திருவள்ளுவருடைய கோவிலில்லையானதினால் அதில் நடக்குமாறு வைகாசி அனுடநாள் அவர் குருபூசை நாளன்று என்றும் எழுதி யிருந்தனர். திருவள்ளுவர் இருவர் அல்லர் எனவும் திருமயிலைத் திருக்கோவில் திருக்குறளாசிரியருடையதே எனவும் நமது இத யேத்தில் விளக்கியுள்ளோம். 22—6—31 ன் குறிப்பை ஆராய் வோம். திருவள்ளுவர் குருபூசை பல்லாண்டுகளாக மாசி உத்திரத்

தில் கொள்ளப்பெறுவது என அவர்கள் கூறுவது சரியில்லை. உயர் திரு. ஆறுமுகநாவலர் அவர்களுடைய சைவவினாவிடைக் குறிப்பின் பின்னர்தானே உண்மை தெரியாத சில இடங்களில் மாசி உத்தரத்தில் குருபூசை நடைபெற்று வருகிறது. பண்டைக் காலத்தில் நிகழ்ந்த ஒன்றை முடிவு காண்பதற்குப் பண்டைய நூல்களிலோ கல்வெட்டுகளிலோ ஆதாரங் காணப்பெறல் வேண்டும். அவ்வாறு திருவள்ளுவர் குருபூசை நாளுக்கு யாதொருஆதாரமுமில்லை. அதனால் பிற ஏதுக்களாலேயே அது நிலைபெறுத்தப் பெறல் வேண்டியதாயிருக்கிறது. உயர்திரு. ஆறுமுகநாவலரவர்கள் தமது குறிப்புக்கு ஆதாரமொன்றும் தமது சைவவினா விடையிலாவது திருக்குறட்பதிப்பிலாவது காட்டவில்லை. பிற ஏதுக்களால் வலியுறுத்தப்பெறாத பண்டைப் பாட்டெனக் கூறப்பெறும் ஒன்றை மட்டும் நம்பி இத்தனை சிறந்த விழா நாளைத் துணிதல் தவறு.

திருவள்ளுவநாயனார் பிறந்து வளர்ந்து திருவடியடைந்த திருமயிலையிலே அவருக்கென ஏற்பட்டுள்ள கோவிலில் பண்டுதொட்டு இன்றுவரை வைகாசி அனுடநாளிலேயே குருபூசை விழா நடைபெறுகிறது. அதனை அடுத்துத் திருவொற்றியூரிலுள்ள திருவள்ளுவர் கோவிலிலும் அங்ஙனமே நடைபெறுகிறது என்றால் இதனைக் காட்டிலும் இவ்விழாவைப்பற்றி முடிவுகட்டுவதற்கு வேறு என்ன ஏது வேண்டும்? சில ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டுள்ள சில குருபூசை மடங்களில் மாசி உத்தரத்தில் குருபூசை நடக்கிறது என்பது தகுந்த ஏதுவாகுமா? திருமயிலைக் கோவிலில் மாசி உத்தரத்தில் நடக்கும் விழா குருபூசை விழாவோ என ஐயுற இடமேயில்லை. ஏனெனில் வைகாசி அனுடமே குருபூசை நாளாக யாதொரு ஐயமுமில்லாமல் அங்கே நடைபெற்று வருகிறது. மாசி உத்தரத்தைப் பற்றி அது பிறந்த நாளோ அன்றி அக்கோவிலின் ஆண்டு விழா நாளோ (வருஷாபிஷேகமோ) என்ற ஐயமே சிலருக்கு இருக்கிறது. (ஆனால், 'கும்பமதி யுத்தரத்தில்' என்ற பழம்பாட்டில் மாசி உத்தரம் அவர் பிறந்தநாள் என்பதும் வைகாசி அனுடம் அவர் குருபூசை நாள் என்பதும் வெளிப்படை.) திருமயிலைக் கோவிலில் வைகாசி அனுடத்திலேயே குருபூசை விழா நடைபெறுகின்றது என்பதை மறுக்கமாட்டாமலே சம்மேளனத்தார் அக்கோவிலை வேறொரு கோவிலென்று கூற முன்வந்தார். மேலும் வைகாசி அனுடநாளே

குருபூசை நாளென்பதைத் திருவள்ளுவர் புராணமும் கூறுகிறது. அப்புராணம் ஒன்று இருப்பதாகப் பலர் அறியாமலிருப்பதும் அது திருமயிலையில் மட்டும் காணப்பெறுவதும் அதன் பெருமையையோ பழமையையோ ஒரு சிறிதும் குறைபடுத்தமாட்டா. பெரும்புலவரும்கூட அறியாத "பெருங்கதை" என்ற அரிய நூல் இப்போது தான் வெளிவந்திருக்கிறது. தேவாரப் பதிகங்கள், தொல்காப்பியம் முதலிய பண்டைய நூல்களும் இங்ஙிலையினவே என்பதை முன் குறித்திருக்கிறோம். திருவள்ளுவர் புராணம் பிற இடங்களில் காணப்பெறாமையும் திருமயிலையில் மட்டும் காணப்பெறுவதும் வியப்பில்லை. திருமயிலை, திருவொற்றியூர்களிலுள்ள திருவள்ளுவர் கோவில்களில் பண்டுதொட்டு வைகாசி அனுடத்தில் குருபூசை விழா நடைபெறுவதும் அதனைத் திருவள்ளுவர் புராணம் வலியுறுத்துவதும் இவ்வேதுக்களுக்கு மாறாக மாசி உத்தரமே குருபூசைநாள் என்பதற்குத் தக்க ஏது ஒன்றும் இன்மையும் பெறப்படுகின்றன. இதன்பின்னராவது சிவநேசன் பத்திராதிபரவர்களுக்கு உண்மை விளங்குமென்று நம்புகின்றோம்.

திருக்குறள் ஆசிரியராய திருவள்ளுவநாயனார் பிறந்து வாழ்ந்த திருமயிலையில் கபாலீசுவரர் கோயில் கிழக்கோபுரத்திலிருந்து நேரே வடக்கேபோகும் வழியே போனால் ஒரு பெருமாள் கோயிலுக்குப் பின்புறமாகப் போகும். அதைக் கடந்ததும் வழிக்கு மேற்புறம் காணப்படும் ஒரு சிறுகோயிலே திருவள்ளுவர் கோயில் ஆகும். இக்கோயிலினையும் வாசுகியம்மையார் கோயிலினையும் படம் பிடித்து 1923-ம் ஆண்டில் வெளிவந்து F.A. பரீட்சைக்குப் பாடமாக வைக்கப்பட்ட தமிழ் இலக்கியம் - சங்க காலம் என்ற நூலின் 88-ஆம் பக்கம் இணைக்கப்பட்டிருப்பதை பள்ளி மாணவரும் ஏனையோரும் அறிந்திருப்பர். இதன்றி திருமயிலாப்பூரில் சம்பந்தர் பாடிய பூம்பாவைப்பதிகத்தின் 7-வது பாட்டிற் கூறப்பட்டிருக்கும் ஒளி விழாவாகிய பங்குனி உத்தரத்தை ஒட்டி ஒரு பெருவிழா (பிரமோற்சவம்) வருடந்தோறும் நடந்துவருகிறது. அதில் எட்டாம் திருநாளுக்கே அறுபத்து மூவர் உத்சவம் என்று பெயர். அன்று கபாலீசுவரர் அறுபத்துமூன்று நாயன்மாரோடு மாலை 3-மணிக்கு மக்கட்குக் காட்சி கொடுப்பது வழக்கம். திருமயிலைத் திருவள்ளுவரை சைவ மக்களனைவரும் சைவரெனக் கொண்டாடு

வதற்கு அடையாளமாக வள்ளுவப்பெருமானையும் 1908-ம் வருட முதற்கொண்டு திருமயிலை அறுபத்துமூவர் திருவிழாவன்று திருவள்ளுவர் கோயிலிலுள்ள அவரது திருவுருவத்தையும் அந்நாயன்மாரோடு சேர்த்து எழுந்திருத்துச் செய்துவருகின்றார்கள். அன்று லட்சக்கணக்கான மக்கள் இவ்விழாவில் வருடந்தோறும் திருக்குறளாசிரியராகிய திருவள்ளுவரையும், வாசுகியம்மையாரையும் வழிபட்டுவரும் உண்மையையும் மறந்து திருமயிலையிலுள்ள திருவள்ளுவர் கோயில் ஞானவெட்டியான் என்னும் வைத்திய நூலை இயற்றிய திருவள்ளுவன் கோயிலெனக் கூற முன்வந்தவர் அறிவு தான் என்னே! இவர் கூற்றை அறிவுடையோர் எவரும் ஒப்புக் கொள்ளார். ஓம் சிவம். சிவம். சிவம்.

அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.

ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும். (குறள்)

5—7—31. இ. மு. சுப்பிரமணியபிள்ளை.

மீனாக்ஷியா பிரஸ், திருநெல்வேலி. 7—31.